**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 18.08.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, மக்களவை முதலில் இருமுறையும், பின்னர், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

மின்தூக்கி உற்பத்தியில், நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழகம் மேம்பட்டு வருவதாக, தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில், புதிய டிஜிட்டல் எக்ஸ் ரே கருவி உள்ளிட்ட வசதிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

------------------------

மோடி-ராதாகிருஷ்ணன் (11)

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ள மஹாராஷ்ட்ர ஆளுநர்

திரு. சி.பி ராதாகிருஷ்ணன், இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து வாழ்த்து பெற்றார். பல ஆண்டுகளாக பொது வாழ்வில் ஈடுபட்டு வருபவர் திரு. சிபி. ராதாகிருஷ்ணன் என்றும், பல்வேறு துறைகளில் அவரின் நீண்ட நெடிய அனுபவத்தினால், நாடு பெருமளவில் வளம் பெறும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார். திரு. சிபி. ராதாகிருஷ்ணன் இதுவரை தாம் வெளிப்படுத்தி உள்ள அதே அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் உறுதிப்பாட்டுடன் நாட்டிற்கு தொடர்ந்து சேவை புரிவார் என தாம் நம்புவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

------------------------

*ராதாகிருஷ்ணன்-ரங்கசாமி* (5)

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ள திரு. சிபி. ராதாகிருஷ்ணனின் பணிகள் சிறக்க, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து இன்று அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்......

**(வாய்ஸ்-ரங்கசாமி)**

------------------------

*நாடாளுமன்றம்* 1 (18)

பீகார் மாநிலத்திற்கான, சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தொடர்பாக, இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள்

ஏற்படுத்திய அமளி காரணமாக, மக்களவை முதலில் இருமுறையும், பிற்பகல் 2 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மாநிலங்களவையில், முதலாவது ஒத்தி வைப்பிற்கு பின்னர், பிற்பகல் 2 மணிக்கு அலுவல்கள் மீண்டும் தொடங்கிய போது, **இந்தியத் துறைமுகங்கள்** மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், இந்தியா விரைவிலேயே, உலகின் முன்னணி **கடல் வர்த்தக** நாடாக மேம்படும் என்று, மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால், விவாதங்களுக்கு பதில் அளிக்கையில் கூறினார்.

முன்னதாக, இன்று காலை மாநிலங்களவையில், முன்னாள் உறுப்பினர் இல.கணேசன் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அவையின் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் இரங்கல் குறிப்பை வாசித்ததை தொடர்ந்து, உறுப்பினர்கள் ஒருநிமிடம் மவுனம் அனுசரித்தனர்.

மக்களவையில் இன்று அமளிக்கு இடையிலேயே, **ஜன் விஷ்வாஸ்** திருத்த மசோதாவை, தொழில்-வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அறிமுகப் படுத்தினார். தொடர்ந்து இம்மசோதாவை, அவையின்



**தெரிவிக்குழு ஆய்விற்கு** அனுப்பி வைப்பதற்கான தீர்மானம் அவையில் நிறைவேற்றப்பட்டது. மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான்,

ஐஐஎம்-நிர்வாகவியல் கழகங்கள் தொடர்பான திருத்த மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தினார்.

பிற்பகல் 2 மணிக்கு மேல், மக்களவையில் அலுவல்கள் மீண்டும் தொடங்கிய போது, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம்மேற்கொண்டு திரும்பியுள்ள இந்தியாவின் முதலாவது விண்வெளி வீரர் **குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா**-விற்கு பாராட்டு தெரிவிக்கும் வகையிலான தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சபாநாயகர் திரு. ஓம் பிர்லா, விண்வெளி வீரர் சுக்லாவை பாராட்டிப் பேசியதை தொடர்ந்து, மத்திய அறிவியல்-தொழில்நுட்ப அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையிலேயே விவாதங்களை தொடக்கி வைத்தார். சபாநாயகர் பலமுறை வேண்டுகோள் விடுத்தும், அவையில் அமளி நீடித்ததால், மக்களவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

-----------------------

வைஷ்ணவ் (14)

**இந்திய அறிவுசார் சொத்துரிமை** அடிப்படையிலான, **கணிப்பொறிச் சில்லு**களின் உற்பத்தியில் சிறப்பு கவனத்துடன், உற்பத்தி சார்ந்த நாடாக மேம்படுவதற்கான முயற்சிகளை, இந்தியா தீவிரப்படுத்தி வருவதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இந்தியாவின் செமி கண்டக்டர் இயக்கம் குறித்து, இன்று நாளேடு ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையை அவர் சமூக

ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். இந்தியாவில் செமி கண்டக்டர் துறை சார்ந்த புதுமைப் படைப்புகளை ஊக்குவிக்கும் வகையில், வடிவமைப்புகள் இணைந்த ஊக்கத் தொகைத் திட்டம் அமலாகி வருவதையும், அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இத்திட்டத்தின் ஆதரவு, மற்றும், சென்னை ஐஐடி உயர்க் கல்வி நிறுவனத்தின் நிபுணத்துவ உதவியுடன், பாதுகாப்பு மிகுந்த ioT கணிப்பொறிச் சில்லுகளை தயாரிக்கும் ஸ்டார்ட்-அப் நிறுவனம் ஒன்றின் வெற்றிக் கதை குறித்தும் அமைச்சரின் கட்டுரையில் விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

------------------------

*ஸ்டாலின் (10)*

மின்தூக்கி உற்பத்தியில், நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழகம் மேம்பட்டு வருவதாக, தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார். தற்போது நாட்டின் மொத்த மின்தூக்கி உற்பத்தியில் மூன்றில் ஒருபகுதி, தமிழகத்தில் தயாரிக்கப் படுவதாக, சென்னையில் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். தமிழக அரசின் பல்வேறு திட்டங்களால், மாநிலத்தில் பெண் கல்வி விகிதமும், பெண்கள் குறித்த சமூக விழப்புணர்வும், அதிகரித்து இருப்பதாக அவர் கூறியுள்ளார். நகரங்கள் மற்றும் கிராமங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்க, காவலன் செயலி, மற்றும், இரவு நேர ரோந்துப் பணித் திட்டங்கள் அமலாகி வருவதையும் தமிழக முதலமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

------------------------

புதுச்சேரி நெஞ்சக நோய் (12)

புதுச்சேரியில், கோரிமேட்டில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில், 1 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ள, டிஜிட்டல் எக்ஸ் ரே கருவி, மற்றும், 4 கையடக்க எக்ஸ் ரே உபகரணங்களை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி. ஆறுமுகம், சுகாதாரத் துறைச் செயலர் திரு. ஜெயந்த் குமார் ரே, சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். பின்னர், அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் வெங்கடேஷ், ஆகாஷ்வாணி செய்தியாளருக்கு அளித்த பேட்டியில், காசநோயை எளிதாகவும், விரைவாகவும் கண்டறிய, புதிய வசதிகள் பெருமளவில் உதவும் என்றார். டாக்டர் வெங்கடேஷ் பேட்டியில் இருந்து ஒருபகுதி.....

**(வாய்ஸ்-டாக்டர் வெங்கடேஷ்)**

------------------------

*காரைக்கால் ஆட்சியர் (12)*

காரைக்கால் மாவட்டத்தின் புதிய ஆட்சியராக, ஐஏஎஸ் அதிகாரி திரு. AS PS. ரவி பிரகாஷ் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். மாவட்ட துணை ஆட்சியர் திரு. அர்ஜுன் ராமகிருஷ்ணன், சால்வை அணிவித்து புதிய ஆட்சியரை வரவேற்றார். துணை ஆட்சியர்கள், திரு. செந்தில்நாதன், திரு. வெங்கட கிருஷ்ணன், மற்றும், மாவட்ட அளவிலான

இதர அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பின்னர் திரு. ரவி பிரகாஷ் செய்தியாளர்களிடம் பேசுகையில், காரைக்கால் மாவட்டம் குறித்து, தமக்கு ஏற்கனவே ஓரளவு புரிதல் உண்டு என்றும். மாவட்டத்தின் குறைகளை கண்டறிந்து, மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்பட முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும் கூறினார். வெளிப்படையான நிர்வாகத்தை மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

------------------------

*புதுச்சேரி பாராட்டு* (8)

புதுச்சேரியில், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்ப தலைவிகளுக்கு, மாதாந்திர நிதிஉதவி வழங்கும் திட்டத்திற்கான பயனாளிகளை தேர்ந்தெடுப்பதில், ஒருங்கிணைந்த தரவு தளத்தை சிறப்பான முறையில் பயன்படுத்தியதற்காக மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறைக்கு, சுதந்திர தின விழாவின் போது வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழை, துறை இயக்குநர் செல்வி. முத்து மீனா மற்றும் இதர அதிகாரிகள் இன்று சட்டப் பேரவையில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

------------------------

*புதுச்சேரி தீவிபத்து* (7)

புதுச்சேரியில் தவளக்குப்பம் முருகர் கோவில் பின்புறம் உள்ள தனியார் ரசாயன தொழிற்சாலை ஒன்றில் நேற்றிரவு ஏற்பட்ட பெரும் தீவிபத்தை தீயணைப்புத் துறையினர், பலமணி நேரம் போராடி

அணைத்தனர். புதுச்சேரி, பாகூர், வில்லியனூர் மற்றும் தன்வந்திர நகரில் இருந்து, தீயணைப்பு வண்டிகள் வரவழைக்கப்பட்டு தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர். தீயணைப்புப் பணிகளின் போது, அப்பகுதியில் மின்சாரம் நிறுத்தப்பட்டு, புகை மூட்டமும் ஏற்பட்டதால், பரபரப்பு நிலவியது.

------------------------

*சென்னை பாஸ்போர்ட்* (6)

சென்னையில் உள்ள மண்டல பாஸ்போர்ட் மையம், அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், மாணவர்களுக்கான **நடமாடும் பாஸ்போர்ட் சேவை முகாம்** ஒன்றை இன்று தொடக்கி உள்ளது. நாளை மாலை வரை இந்த முகாம் நடைபெறும் என்றும், ஒவ்வொரு நாளும், இணைய தளம் மூலம் பதிவு பெற்ற 45 பேரின் பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் சரிபார்த்து ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

------------------------

*வானிலை* (17)

இன்று, மத்திய மேற்கு, மற்றும், அதை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவும் ஆழந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, அடுத்த 12 மணி நேரத்தில், காற்றழுத்தத் தாழ்வு மண்டலாக வலுப்பெற்று, நாளை முற்பகல் வாக்கில், தெற்கு ஒடிசா, மற்றும் வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை கடக்கக் கூடும் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. இது அல்லாது, வடகேரளத்திற்கு அப்பால் அரபிக் கடலில், காற்றழுத்தத் தாழ்வு

நிலையும், தென்னிந்தியப் பகுதிகளின் மேல், வளிமண்டல மேலடுக்கு சுழற்சியும் நிலவுகின்றன. இன்றைய தினம், தமிழகத்தில் ஓரிரு இடங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 24ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தென்மேற்கு பருவமழை, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் தீவிரமாக இருந்தது. அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் கூடலூர் பஜார் உள்ளிட்ட இடங்களில், தலா 14 செ.மீ மழை பதிவாகி இருந்தது. கடந்த 24 மணி நேரத்தில் புதுச்சேரியில், 2 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

------------------------

மேட்டூர் (10)

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை பெய்து வரும் நிலையில், கபினி மற்றும் கே.ஆர் சாகர் அணைகளில் இருந்து, வினாடிக்கு 95 ஆயிரம் கனஅடி நீர் காவிரியில் வெளியேற்றப்படுகிறது. இதன்காரணமாக, மேட்டூர் அணை விரைவில் நிரம்பும் என எதிர்பார்க்கப் படுகிறது. அணை நிரம்பியவுடன், உபரி நீர் முழுவதும் காவிரியில் வெளியேற்றப்படும் என்பதால், தமிழகத்தில் காவிரி கரையோரம் அமைந்துள்ள 11 மாவட்டங்களுக்கு, வெள்ள அபாயம் குறித்து எச்சரிக்கை

விடுக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, ஒகேனேக்கல் காவிரி ஆற்றில், நீர்வரத்து அதிகரிக்கலாம் என்பதை கருத்தில் கொண்டு, சுற்றுலாப் பயணிகள் அருவியில் குளிக்க தடை விதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

------------------------

*சத்தீஸ்கர் தாக்குதல்* (6)

சத்தீஸ்கர் மாநிலம், பஸ்தார் கோட்டத்திற்கு உட்பட்ட, பீஜாபூர் மாவட்டத்தில் இன்று, மாவோயிஸ்ட்டுகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில், பாதுகாப்புப் படை ஜவான் ஒருவர் உயிரிழந்தார். மேலும் மூவர் காயமடைந்தனர். பாதுகாப்புப் படையினர், நக்சல் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த போது, இந்த சம்பவம் நிகழ்ந்ததாக, சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

------------------------

*சீனா வருகை* (7)

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினரும், அந்நாட்டு வெளியுறவு அமைச்சருமான திரு. வாங் யி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் அழைப்பின் பேரில், 2 நாள் பயணமாக, இன்று இந்தியா வந்துள்ளார். இப்பயணத்தின் போது, இந்தோ-சீன எல்லைப் பிரச்சனை குறித்து, சிறப்புப் பிரதிநிதிகளுக்கு இடையிலான 24ஆவது சுற்று பேச்சு வார்த்தைகளை அவர் நடத்துவார். வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரும், சீன வெளியுறவு அமைச்சரை சந்திக்க இருக்கிறார்.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, மக்களவை முதலில் இருமுறையும், பின்னர், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

மின்தூக்கி உற்பத்தியில், நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழகம் மேம்பட்டு வருவதாக, தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில், புதிய டிஜிட்டல் எக்ஸ் ரே கருவி உள்ளிட்ட வசதிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**